**செய்தி வெளியீடு எண்: 721** **நாள்:01.10.2020**

**வணிகவரி மற்றும் பதிவுத்துறை**
**செய்தி வெளியீடு**

**22.09.2020** அன்று நடைபெற்ற அமைச்சர்கள் குழு கூட்டத்தில் தமிழகத்திற்கு **2017–18–**ஆம் ஆண்டில் வழங்கப்பட வேண்டிய ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வு ரூ.**4,321** கோடி என ஒப்புக்கொள்ளப்பட்டது. அமைச்சர்கள் குழு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்திற்கு பரிந்துரைகள் செய்வதற்கு முன்னர், மாநில அரசுகள் தங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய தொகையினை மீண்டும் ஒரு முறை சரிபார்க்கப்படவேண்டும் என முடிவு செய்யப்பட்டது. இன்று **01.10.2020** அன்று நடைபெற்ற கூட்டத்தில், தற்போது நிலுவையிலுள்ள தொகை குறித்த கணக்கீடுகள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டுள்ளன என்றும், தமிழகத்திற்கு வழங்கப்பட வேண்டிய தொகையை, மத்திய அரசு முழுமையாக வழங்கிட வேண்டும் என்று மாண்புமிகு மீன்வளம் மற்றும் பணியாளர், நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார். அமைச்சர்கள் குழு மாநிலங்களுக்கு அளிக்கப்படவேண்டிய இறுதி தொகையினை ஆராய்ந்து, **05.10.2020** அன்று நடைபெற உள்ள சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக் கூட்டத்தில் பரிசீலனை செய்திட பரிந்துரை செய்துள்ளது. இன்று இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்ட பரிந்துரைகளின்படி தமிழ்நாட்டிற்கு அளிக்கப்படவேண்டிய நிலுவைத் தொகை விரைவில் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பீகார் துணை முதலமைச்சர் தலைமையிலான இந்த அமைச்சர்கள் குழு கூட்டத்தில், மாண்புமிகு மீன்வளம் மற்றும் பணியாளர், நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சருடன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசுச் செயலாளர், டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப., மற்றும் வணிகவரி முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர் திரு. எம். ஏ. சித்திக், இ.ஆ.ப., ஆகியோரும் கலந்து கொண்டனர்.

Dr. பீலா ராஜேஷ்
அரசுச் செயலாளர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**